THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

# ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தல் திட்டம்

## திட்டப் பணியாளர்களை ஆட்சேர்த்தல்

## பெறுகை அதிகாரி — 01 பதவி

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை மேம்படுத்தும் திட்டமானது உலக வங்கியினால் நிதியிடப்படும், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இதன் மொத்த செயற்றிட்டச் செலவு 150 மில்லியின் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் 2024-2028ஆம் காலப்பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) பெறுகை அதிகாரி பதவியை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பளம் (இணைப்பு 02), அனுபவம் மற்றும் தகைமைகள் (இணைப்பு 01) மற்றும் மேலதிக தகவல்கள் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 2026 மார்ச் 28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் இருக்கும்.

| பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | வகுதி (02/2026 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்) | தகைமைகள் |
|---|---|---|---|
| பெறுகை அதிகாரி | 01 | வகை F | 1. தொடர்புடைய துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் NVQ 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ்<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம்<br>அல்லது<br>2. தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் NVQ-6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ்<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம்<br>அல்லது<br>3. தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் NVQ-5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ்<br>அத்துடன்<br>தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் 08 வருடகால அனுபவம்<br>(முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் 02/2026, இணைப்பு 01, பக்கம் vii, வகை F (25 மில்லியன் US$ இற்கு மேற்பட்ட மற்றும் 200 மில்லியன் US$ இற்கும் குறைவான நெடுவரிசையைப் பார்க்கவும்).<br>**சம்பளம்**<br>ரூபா 150,000.00 - 165,000.00 + CoL<br>(முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் 02/2026, இணைப்பு 02, பக்கம் xiii, வகை F (25 மில்லியன் US$ இற்கு மேற்பட்ட மற்றும் 200 மில்லியன் US$ இற்கும் குறைவான நெடுவரிசையைப் பார்க்கவும்). |

செயற்றிட்ட தகவல்களுக்கு தயவு செய்து https://phsep.lk இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

விபரமான அல்லது சுய தரவுகளுடன் (குறிப்பிட்ட வடிவம் இல்லை) கல்வி, அனுபவம் மற்றும் ஏனைய தகைமைச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம் / மின்னஞ்சல் முகவரி சகிதமான விண்ணப்பங்களை ''பெறுகை அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்'' எனத் தலைப்பிட்டு 2026 ஆகஸ்ட் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்புதல் வேண்டும்.

**முகவரி:**

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
**191 ஏ, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், "The Bungalow"**
**தர்மபால மாவத்தை, கொழும்பு 07**

**மின்னஞ்சல்: info@phsep.lk,**
**தொலைபேசி: 011 2271150**

தேவையான தகைமைகள், அனுபவம், திறன் மற்றும் திறமைகளைக் கொண்டிராத, தாமதமான, முழுமையற்ற, ஆதரவு ஆவணங்கள் இணைக்கப்படாத, பதிவுத் தபால் அல்லாத வேறு முறைகளில் (மின்னஞ்சல், நேரடியாக ஒப்படைத்தல் அல்லது வேறேதாவது முகவரி) அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை நிராகரிக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டம்**
**2026 ஜூலை 21.**